மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : சரியாக எத்தனை கோடி ரூபாய் மதிப்பீடு இடப்பட்டது என்ற புள்ளி விவரங்கள் இல்லை. இருந்தாலும் நம்முடைய அரசு தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

மீனவர் கூட்டுறவுச் சம்மேளனங்கள்.

* வினு எண். 108.— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட மீனவ கூட்டுறவு சம்மேளனம் எந்தெந்த மாவட்டங்களில் உள்ளன ?

(ஆ) அவைகளுள் இயங்காமல் உள்ளவை எத்தனை?

(இ) அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) கீழ்க்கண்ட ஒன்பது மாவட்டங்களில் உள்ளன—

1. சென்னை,
2. செங்கற்பட்டு,
3. தென்னுற்காடு,
4. தஞ்சாவூர்,
5. திருநெல்வேலி,
6. வட ஆற்காடு,
7. இராமநாதபுரம்,
8. மதுரை,
9. கன்னியாகுமரி.

(ஆ) ஒன்றுமில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். கணேசன் : இந்த மீனவக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் மூலமாக எந்தெந்த வகையில் மீனவப் பெருங்குடி மக்கள் பயன் அடைகிறார்கள் ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இந்த மீனவச் சம்மேளனங்கள் மூலமாக மீனவர்களுக்கு வேண்டிய நைலான் வலைகள், அவர்களுடைய தொழில்களுக்குத் தேவையான மற்ற சில சிறிய பொருள்கள், வியாபாரம் செய்வதற்கான நிதி வசதி எல்லாம் செய்யப்பட்டு வருகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1978 செப்டம்பர் 9]

திரு. இரா. தாமரைக்கனி : தமிழ்நாட்டிலிருந்து வருஷத்திற்கு ஒரு தடவை இரால், கருவாடு போன்ற மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கின்றன. இதனால் மத்திய சர்க்காருக்கு அன்னியச் செலவாணி கோடிக் கணக்கில் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே தமிழ்நாட்டிலுள்ள கடற்கரை துறைமுகப் பகுதிகளைச் சீரமைப்பதற்கான செலவுகளை மத்திய சர்க்கார் செய்ய முன்வர வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போல் இங்கிருந்து கடல் செல்வங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் பல கோடி ரூபாய் அன்னியச் செலவாணி கிடைக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மீன்பிடி துறைமுகங்களை அதிகப் படுத்தத் தேவையான நிதி வசதிகளை மத்திய அரசு செய்ய வேண்டியது நியாயந்தான். அதை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

திரு. அ. செல்லப்பா : அளிக்கின்ற நிதி சலுகைகள் போன்றவற்றை மாவட்ட அமைப்புகளுக்கு ஒட்டு மொத்தமாக அளிக்காமல் வட்ட அமைப்புகளுக்குப் பிரித்து வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாவட்டங்களில் பணியாற்றுகின்ற மீனவ கூட்டுறவுச் சம்மேளனங்கள் அந்த மாவட்டம் முழுவதும் பணியாற்ற வேண்டுமென்பதுதான் விதி முறை. அந்த அடிப்படையில் இருக்கும் சம்மேளனங்கள் மாவட்டங்களில் எங்கெங்கு மீனவர்கள் இருக்கிறார்களோ அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்ய வேண்டுமென்பது அவர்களுடைய கடமை. அவர்கள் எங்காவது குறுகிய நோக்கத்தோடு சரிவரச் செயல்படவில்லை என்ற நிலைமை இருக்குமானால் உறுப்பினர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதைப் பற்றி விசாரித்து இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே ஹொகனக்கல், தென்பெண்ணை, சென்னாறு இன்னும் இவை போன்ற பல பகுதிகளிலே மீன் வளத்தைப் பெருக்குவதற்கு அதிகமான வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆகவே தர்மபுரி மாவட்டத்திலே மீன்வள கூட்டுறவுச் சம்மேளனத்தைத் தொடங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, தர்மபுரியில் மீன்வள சம்மேளனம் தொடங்குதவற்குண்டான சாத்தியக்கூறுகள் எந்த அளவிற்குத் தேவையாக இருக்கிறது என்பதைப் பற்றி எல்லாம் பரிசீலனை செய்து தேவையிருக்கிறது என்று அரசு முடிவெடுக்குமானால் அங்கே ஒரு சம்மேளனத்தைத் தொடங்க அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, மீன்வள சம்மேளனம் இல்லாத மாவட்டங்களிலே பொதுவாக அரசாங்கத்துக்கு சம்பந்தப்பட்ட ஏரிகள், குளங்கள் இருக்கின்றன. அவைகளில் மீன்களை பிடிக்க ஏலம் விடுகிறார்கள். அப்போது மீனவர்களுக்கு அதிலே முன்னுரிமை தரப்படுகிறதா ? இல்லையென்றால் எந்த முறையில் ஏலம் விடப்படுகிறது? குறிப்பாக மீனவர்களுக்கு முன்னுரிமை தருவதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, வடாற்காடு, தர்மபுரி, மாவட்டங்களிலே மாத்திரமல்ல, தமிழகத்தின் எந்தப் பகுதியிலே உள்ள ஏரி, ஆறு, குளம், வாய்க்காலாக இருந்தாலும் அவை போன்றவைகளை மீன்பிடிக்க குத்தகைக்கு விடுகிறார்கள், அப்போது மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டுமென்று ஏற்கனவே அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

கள்ளக்குறிச்சியில் முதல் வகுப்பு நீதிமன்றம்

*வினா எண். 109— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் முதல் வகுப்பு நீதி மன்றம் ஒன்று அமைக்கக் கோரி அரசிடம் விண்ணப்பம் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: (a) No.

(*b*) Does not arise.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சிப் பகுதியிலே வசிக்கின்ற மக்கள் எல்லாம் தற்சமயம் உளுந்தூர்பேட்டைக்குச் சென்று வழக்காட வேண்டியிருக்கிறது. கள்ளக்குறிச்சியிலிருந்து உளுந்தூர்பேட்டை கிட்டத்தட்ட 60 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. 60 கிலோ மீட்டர் செல்லக்கூடிய அந்த அளவிற்கு நம்முடைய நாட்டு மக்கள் பொருளாதாரத்திலே முன்னேறவில்லை. கள்ளக்குறிச்சியிலே அதிகமான வழக்குகள் வருகின்றன. ஆகவே, கள்ளக்குறிச்சியிலே முதல் வகுப்பு நீதிமன்றம் ஏற்படுத்துவதற்கு உடனடியாக முடியாவிட்டாலும் (Camp Court) கேம்ப் கோர்டாவது உடன் அமைத்துத் தர அரசு முன்வருமா ?